**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 111/2013 ராமமூர்த்தி (வாசா1) தேதி:08.09.2025</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 11 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் என் மனைவி பெயரில் எழுதிக்கொடுத்துள்ள அசல்ஏற்பாடு ஆவணத்தை இந்தவழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நானும் என் சகோதரர்களும் செய்துகொண்ட பதிவு பாகப்பிரிவினை ஆவணத்தின் சார்பதிவக நகல் என்றால் சரிதான். அது **பிசாஆ.1** ஆகும். வாசாஆ.22 ஆவணத்தில் 1962ம் வருட வாசாஆ.40 ஆவணம் பற்றி எந்தவிவரமும் துலங்காது என்றால் சரிதான். என் உடன்பிறந்த சகோதரர் பெயர் ராமகிருஷ்ணன் என்றால் சரிதான். அந்த ராமகிருஷ்ணன் என்பவர் அவரது மகன் சுரேஷ் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றாலும் அந்தஆவணத்திலும் 1962ம் வருட வாசாஆ.40 ஆவணம் பற்றி எந்தவிவரமும் துலங்காது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பிசாஆ.2**. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்உடன்பிறந்த சகோதரர் ஆறுமுகம் என்பவர் அவரது மனைவி இந்திரா என்பவருக்கு எழுதிகொடுத்துள்ள தானபத்திரத்தின் சார்பதிவக நகல் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பிசாஆ.3**. இந்த ஆவணத்திலும் 1962ம் வருட வாசாஆ.40 ஆவணம் பற்றி எந்தவிவரமும் துலங்காது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது உடன்பிறந்த சகோதரர் சண்முகராஜ் என்பவர் அவரது மகன்களான பாலமுருகன், செந்தூர் பாண்டியன் ஆகியோர்களுக்கு தானமாக சொத்துக்களை எழுதிகொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பிசாஆ.4**. இந்த ஆவணத்திலும் 1962ம் வருட வாசாஆ.40 ஆவணம் பற்றி எந்தவிவரமும் துலங்காது என்றால் சரிதான். வாசாஆ.40 ஆவணம் என்னால் மோசடியாக உருவாக்கப்பட்டதால்தான் அந்த ஆவணம் பற்றி எந்தஇடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தை பொறுத்து 11 முதல் 15 பிரதிவாதிகளின் பங்குகளை மோசடிசெய்யவேண்டும் என்ற எண்ணத்தில் எனது சகோதரர்கள் இடையே ஆவணங்களை உருவாக்கி மோசடி செய்துள்ளோம் என்றால்

சரியல்ல. மேற்படி பிசாஆ.1 முதல் பிசாஆ.4 வரையிலான மோசடியான ஆவணங்களைபற்றி தற்போதுதான் 11 முதல் 15 பிரதிவாதிகளுக்கு தெரியவருகிறது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது தந்தை விளாத்திகுளம் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியில் வைத்த அடமான பத்திரத்தின் சார்பதிவக நகல் என்றால் சரிதான். அது **பிசாஆ.5**. பிசாஆ.5 ஆவணத்தில் சூரங்குடி கிராமத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட ரி சர்வேஎண்.365 எங்கள் பாகவிஸ்தீரணம் ஆகிய ஏக்கர் 1 செண்ட் 50 ல் ஒரு புதிய குழாய் கிணறு வெட்ட தங்களிடம் நேரடியாக ரொக்கம் பெற்றுக்கொண்டது என விவரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அது கிணறு வெட்டுவதற்காக கடன்வாங்கியதாக எனது தந்தை என்னிடம் கூறியுள்ளார். சர்வேஎண்.365 ல் உள்ள 9 ஏக்கர் 36 செண்டும் செந்தூர்தேவருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும் பெரியராமையாதேவரின் வாரிசுகள் அனைவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. வாசாஆ.14 ஆவணத்தில் 11 முதல் 15 பிரதிவாதிகளின் முன்னோர் முனியசாமித்தேவர் பெயரும் காட்டப்பட்டுள்ளது என்றால் பெரியராமையாதேவரின் வாரிசுகள் பெயர்கள் காட்டப்பட்டு அவர்கள் பெயரில் இருந்த பட்டாவை நீக்கி எனது தந்தை செந்தூர்தேவர் பெயரில் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.14 உத்தரவு நடைமுறையில் முனியசாமித்தேவரோ அவரது உடன்பிறந்தநபர்களோ , அவரது வாரிசுகளோ உத்தரவு நடைமுறையில் தரப்பனர்களாக இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கும் தாவாசொத்திற்கும் சம்பந்தம் இல்லை. வாசாஆ.14 உத்தரவு ஏற்படுவதற்கு முன்பு வரை பெரியராமையாதேவரின் வாரிசுகள் அனைவர் பெயரிலும் பட்டா இருந்தது என்றால் அவ்வாறு பட்டா இருக்க வாய்ப்பே இல்லை. வாசாஆ.14 ல் நன்கொடை கிரையம் என கிரையம்பெற்ற செந்தூர்தேவர் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.14 உத்தரவு முனியசாமித்தேவருக்கோ அவரது வாரிசுகளுக்கோ தெரியப்படுத்தாமல் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் 2008 ம்வருடம் தாவாசொத்தை பொறுத்து எனது சகோதரர்களுக்கு இடையே மோசடியாக ஆவணங்களை உற்பத்திசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. வருவாய்துறை நடைமுறை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒவ்வொரு முறையும்

நன்கொடை கிரையம் என்றும், பதிவுசெட்டில்மெண்ட் என்றும் மாறிமாறி கட்சிசெய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்மீதும் என் உடன்பிறந்த சகோதரர்கள் மீதும் மோசடியான கிரையபத்திரம் பிறப்பித்தது சம்பந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் வழக்கு பதிவு செய்து அந்தவழக்கு சம்பந்தமாக என்னை கைது செய்தார்கள் என்றால் சரிதான். அந்தவழக்கு விடுதலைசெய்யப்பட்டது. தாவாசொத்து செந்தூர்தேவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என கட்சிசெய்வது மோசடியானது என்றால் சரியல்ல. முனியசாமித்தேவர் வாரிசுகளின் அனுமதி இல்லாமல் மோசடியாக தன்னிச்சையாக பட்டா மாற்றி அதன்பேரில் என் மனைவி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி மற்ற கூட்டு பங்குரிமையாளர்களின் உரிமையை ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. பிசாஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவாசொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் என் மனைவிக்கு எழுதிகொடுத்த வாசாஆ.22 ஆவணத்தில் எனக்கும் என் சகோதரர்களுக்கும் இடையில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ.22 ஆவணம் ஏற்பட்டபோது தாவாசொத்து சம்பந்தமாக வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும், அதன்பின்னர் அதை மறைத்து பதிவு பாகப்பிரிவினை எங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டதாக கூறுவதில் இருந்தே தாவாசொத்தை மோசடியாக அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள பட்டா, தீர்வை ரசீதுகள், பட்டாமாறுதல் உத்தரவு எனது தகப்பனாரின் தனிப்பட்ட அனுபவத்தை காட்டாது என்றால் சரியல்ல. 11 முதல் 15 பிரதிவாதிகளின் பாகஉரிமையை மறைத்து தாவாசொத்து எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாக கூறி விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. முனியசாமித்தேவர் தாவாசொத்தை பொறுத்து எனது தந்தைக்கோ பெரியராமையாதேவருக்கோ எந்த பாகவிடுதலை ஆவணமும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்தவழக்கு மோசடியானது என்றால் சரியல்ல. நான்பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லாது

என்றாலும் 11 முதல் 15 பிரதிவாதிகளை பொறுத்து இந்தவழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**1 முதல் 5,7,10 பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.